## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் - 2015

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டின் இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்ற அதிகாரச்சட்டத்தினது vii ஆம் தொகுதியின் 40 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐரோப்பிய சங்கத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் உடன்படிக்கைப் பிரகாரம் அமுலாக்கப்படாமையால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்காக ஐரோப்பிய சங்கத்திற்கு ரூபா 13,279,398 தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு 2014 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு முடிவுவரை நிதிக்கூற்றுக்களில் தேவையான நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வருமானக் கூற்றிலும், காசுப்பாய்ச்சல் கூற்றிலும் நிலையான சொத்து விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் ரூபா 230,988 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் மூலமாகக் கொடுப்பனவு செய்ய வேண்டியவற்றுக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாதிருக்கையில், மீளாய்வாண்டின்போது சர்வதேச சங்கம் ஒன்றிற்கு 2013 ஆம் ஆண்டினது வருடாந்த உதவுத் தொகையாக ரூபா 1,081,924 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக கடந்த காலங்களுக்கேற்பச் சீராக்கல் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் காசின் மூலம் பெறப்பட்ட வட்டி வருவாய் நிதிச் செயற்பாட்டின் கீழ் ரூபா 744,659 குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன், முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் மூலதன மானியப் பெறுவனவுகள் ரூபா 7,975,000 அதிகரித்துக் காட்டப்பட்டுமிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் பொருட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர்வரி ரூபா 10,475,428 ஆகக் காட்டப்பட்டிருந்தபோதும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 2,475,723 ஆகியமையால் ஏற்பட்ட ரூபா 8,286,705 வித்தியாசத்தை இனங்கண்டு அதற்குச் சீராக்கல் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) ஐந்து நிலையான சொத்துக்களும் நுகர்வுப் பொருட்களினது பெறுமதியும் மெய்மையாய்வு பார்த்தல் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடப்பட்ட போது முறையே ரூபா 40,280,486 மற்றும் ரூபா 639,461 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர் என்பன முறையே ரூபா 70,185 மற்றும் ரூபா 2,679,331 ஆகும். அம் மீதிகளை மீளாய்வாண்டிலேனும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சேவையிலிருந்து விலகிய மற்றும் சேவையில் உள்ள உத்தியொகத்தர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய சம்பளத்திற்கு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 7,030,873 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதில் ரூபா 6,980,352 கொடுப்பனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்காமல் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 240,226,000 கூட்டுத் தொகை நிலையான வைப்புகளில் இடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை அத்தியாயம் 11 பிரிவு 9:1 | அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் ஓராண்டு காலத்திற்கு தொழில்நுட்பப் பணிப்பொறுப்பு மதியுரையாளராக நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 793,990 படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய MOFP/ERD/2011/1 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் சுற்றறிக்கை | வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு அறிவிக்காது மீளாய்வாண்டின்போது ரூபா 2,443,833 பெறுமதியான கொரிய செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | ரூபா 13,581,898 பெறுமதியான கணனி மென் அணிகளும் துணைப்பாகங்களும், ரூபா 4,512,594 பெறுமதி ஆகவுள்ள ஏனைய சொத்துக்களும் பௌதீக ரீதியான மெய்மை பார்த்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2000 சனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கை | |
| | (i) I ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஊக்குவிப்புபடி வழங்கப்படலாகாதெனினும், சாதாரண வேலைகளை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 11,427,864 மற்றும் ரூபா 7,597,411 என ஊக்குவிப்புப் படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) 7.1 ஆம் பிரிவு | மதியுரைச் சேவை வருமானத்தில் நேரடிக் கிரயம் கழிக்கப்பட்டதன் பின்னர் 10 முதல் 25 சதவீதம் வரையான தொகை நிறுவகத்தில் வைத்திருக்கப்பட்டு, எஞ்சிய தொகை திறைசேரியின் விசேட நிதியம் ஒன்றிற்கு 03 மாதங்களுக்கு ஒரு முறை அனுப்பபட வேண்டுமாயினும், அவ்வாறு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |
| (ஊ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் 06(iii) ஆம் பந்தி | ஆராய்ச்சிக்களுக்கான படியைப் பெறுவதாயின் நிரந்தர கடமைக்கு தடை ஏற்படாதவாறு மேலதிக ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், நிறுவகத்தின் சாதாரண கடமைகளின் போது நிறைவேற்றப்படும் ஆராய்ச்சிகளுக்கும் மீளாய்வாண்டின் ரூபா 9,494,405 ஆராய்ச்சிப் படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவு ரூபா 26,282,796 மிகையாகியதுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 55,698,487 ஆகியமையால் முன்னைய ஆண்டிற்கு நிகராக மீளாய்வாண்டினது நிதி விளைவுகளில் ரூபா 29,415,691 நலிவு தென்பட்டது. மீண்டுவருஞ் செலவினத்திற்கான அரச மானியம் ரூபா 40,000,000 அதிகரித்தபோதும், ஊழியர்களுக்கான ஊதியச் செலவினம் ரூபா 65,654,026 மற்றும் தேய்மானம் ரூபா 13,140,727 என அதிகரிப்புக்குள்ளானமையே மேற்படி நலிவுக்கான பிரதான காரணங்களாகும்.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளது நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2011 ஆம் ஆண்டில் ரூபா 59,318,986 ஆகவிருந்த மிகை 2012 ஆம் ஆண்டளவில் ரூபா 22,628,443 வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறிருப்பினும், 2013 ஆம் ஆண்டில் ஆரம்பித்த மிகை அதிகரிப்பானது 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 55,698,487 ஆகியபோதும், அது மீண்டும் 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 26,282,796 வரை குறைவடைந்திருந்தது. ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்தக்களுக்கான தேய்மானம் கருத்திற் கொள்ளப்படுமிடத்து நிறுவகத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டில் ரூபா 359,862,461 ஆகியதுடன், 2012 ஆண்டின் போது பின்தங்கியவாறு அடுத்து வரும் ஆண்டுகளில் தொடர் முன்னேற்றத்திற்குள்ளாகி மீளாய்வாண்டின் போது ரூபா 434,404,485 ஆகியிருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நடைமுறை விகிதம் முறை 6.16 மற்றும் 5.15 ஆகும். விரைவு விகிதம் 6.04 மற்றும் 5.03 ஆகும். மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்துக்கள் உயர்வடைந்தமை மாலபே கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலை நடவடிக்கைகளுக்குப் பெறப்பட்ட தொகை வைத்திருக்கப்பட்டமையே காரணமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றம் தொழில்நுட்ப முன்னேற்ற அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், இலங்கையின் தொழில்நுட்பத்தை வேகமான தொழில்நுட்பத்திற்குத் தேவையான மட்டத்திற்கு உயர்த்துவது கைத்தொழில்நுட்ப நிறுவகத்தின் பிரதான நோக்கம் ஆகும். அதன் பொருட்டுப் பின்வரும் பணிகளை ஈடேற்றுவது நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(அ) கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகளை முன்னேற்றுவதற்கான செயற்பாடுகளையும் நடைமுறை உபாயங்களையும் கண்டுபிடித்தல், பரிசோதனைகள், விசாரணைகள், ஆராய்ச்சி உடன்படிக்கைகளின் அடிப்படையில் பொறுப்பேற்றல், தொழில்நுட்பச் சேவை மற்றும் மதியுரைச் சேவைகளை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப ஒப்படைப்பு, தொழில்நுட்பப் பிரயோகம் என்பவற்றைப் புதிய தொழில்நுட்ப அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் கைத்தொழில்களுக்கு உதவியளித்தல்.

(ஆ) கைத்தொழில் தொழில்நுட்ப அபிவிருத்தியை விளைவுபடுத்தும் எண்ணத்துடன் ஆராய்ச்சிகளை நடாத்தல் ''ஷெல்ப் தொழில்நுட்பம்'' தொடர்பான தகவல்களைச் சேகரித்தல், தயாரித்தல் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தல்.

(இ) நிறுவகம் பெற்றுள்ள அனுபவத்திற்கேற்ப குறித்த பிரிவுகளில் உள்ளோரைப் பயிற்றுவித்தல்.

(ஈ) சுற்றாடல் மாசுபடுதல் தொடர்பான மீளாய்வு மற்றும் மெய்மையாய்வு நடவடிக்கைகளில் தொடர்பு கொண்டு செயலாற்றல் மற்றும் அதனைக் குறைப்பதற்கான மாற்றீடுகளைப் பரிந்துரைத்தல்.

(உ) அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஏனைய சபைகளுடன் கோரிக்கை இணைப்புடனான பரிந்துரை நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

கடந்த 05 ஆண்டுகளின் போது ஆக்கவுரிமை உரித்தைப் பெறுவதற்குரிய 69 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், 60 ஆராய்ச்சிகளுக்கு ஆக்கவுரிமை உரிமையைப் பெறுவதற்கு அதாவது தொழில்நுட்ப ஒப்படைப்பை மேற்கொள்ளுவது நடைபெறவில்லை என மேற்படி பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப் பரிசோதனை சம்பந்தமான செயற்திட்டம் குறித்த காலத்தினுள் நிறைவேற்றப்படத் தவறியமை, கொடுக்கல் வாங்கல்காரர்களது தேவைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்காமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை பூர்த்தி செய்யப்படாமை போன்ற காரணங்களால் சேவை நாடுநர் நிறுவகத்திற்கு ரூபா 3,053,680 ஐச் செலுத்துவது மறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாலபே கட்டிடத் தொகுதியின் முதல் கட்ட நிர்மாண வேலை (Agro Food Technology Building) அமைச்சினது செயற்திட்டம் ஒன்றின் கீழ் ரூபா 832,250,000 செலவில் 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், அக் கட்டிடத்தைச் சுவீகரிப்பதற்கு நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 392 ஆகும். உள்ளவாறான பதவியணி 373 ஆகும். 56 செயற்திட்டங்கள் நிலவியபோதும், 03 பதவிகளில் 07 உத்தியோகத்தர்களுக்கு வரம்புக்கு அதிகமாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2014 நவெம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாது ஒப்பந்த அடிப்படையில் 30 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர் இரண்டாம் மட்டப் பதவிகளில் 2 பதவிகளில் 05

ஊழியர்கள் மேலதிகமாக இருக்கையில், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கிடையே 19 பேர் இரட்டை அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்தனர்.

(இ) 2010 ஜுன் 21 ஆந் திகதிய DMS/E2/24/7/173/2 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் கடிதத்திலுள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிடித்தவாறு சிரேஸ்ட பிரதிப் பதவிகள் 12 உருவாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2012 மே 17 ஆந் திகதிய DMS/B1/62/14 முகாமைத்துவச் சேவைகள் திணைக்களக் கடிதத்தின் மூலம் பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அதில் குறிப்பிடப்பட்ட கட்டளைகளுக்குப் புறம்பாக மீளாய்வாண்டின் போது அந்த உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் படியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாக 03 வங்கி நடைமுறைக் கணக்குகளிலும் 01 சேமிப்புக் கணக்கிலும் ரூபா 1,820,645 கூட்டுத்தொகையான பணம் பயனற்றிருந்தது.

(ஆ) மாலபே நிர்வாகக் கட்டிடத்தை ரூபா 78,280,915 தொகை செலவில் நிர்மாணித்து 05 ஆண்டுகள் பூர்த்தியாகியும் நிர்வாக நடவடிக்கைகள் எதற்கும் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் வழங்கும் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிச் சேவைகளுக்கான விலையை நிர்ணயிப்பதற்கு நிரந்தர கிரய நடைமுறையை ஏற்படுத்துவதற்கென 2013 ஆம் ஆண்டில் ரூபா 350,000 தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டபோதும் புதிய நடைமுறையைக் கடைப்பிடிக்காது முன்னரைப் போன்றே விலையிடப்பட்டதால் செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாக அமைந்தது.

(ஆ) சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கென நிறுவகத்தின் ஆய்வுகூடத்தைப் புணர்நிர்மாணம் செய்தல் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்தும், அதே பணியை சாத்தியக் கூறு மதிப்பீட்டு நிறுவகத்தின் மூலமும் மீண்டும் மேற்கொண்டமையால் ரூபா 1,714,509 பயன்பாட்டிற்கு ரூபா 3,349,962 கூடுதலாகச் செலவிடப்பட்டிருந்தது.

## 4.6 தாமதமாகிய செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின்போது திறைசேரி மூலதன நிதிஏற்பாடுகளின் மூலம் ரூபா 11.2 மில்லியன் பெறுமதியான 09 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டுமாயினும், அத்திகதி வரை அதனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நிறுவகத்தினதும் வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புகளினதும் முறையே ரூபா 03 மில்லியன் மற்றும் ரூபா 07 மில்லியன் பங்களிப்புடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றை 2014 ஆம் ஆண்டின்

போது ஆரம்பித்து 2015 ஆம் ஆண்டில் அதனைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டத்திற்கு ரூபா 2,114,279 செலவிடப்பட்டபோதும், 2016 ஆகஸ்ட் மாதமளவிலும் அச் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருந்தது. எனினும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 01(3) ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடு கால வரையறை மற்றும் அச் செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் இறுதிப் பெறுபேறு என்பவற்றை உள்ளடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அது எவ்விடயத்தை நிறைவேற்றுவதற்கு எனத் திட்டத்தில் குறிப்பிடப்படாமையால், செயல் நடவடிக்கைத் திட்டத்தோடு அதனை இணக்கம் செய்ய முடியவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே குறிப்பிடத்தக்க 31 முதல் 831 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

---

2014 ஆம் ஆண்டு தொடக்கம் தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் 2 உத்தியோகத்தர்கள் மாத்திரமே பணியாற்றுவதால், நிறுவகத்தின் நோக்கெல்லையைக் கருத்திற் கொள்ளுமிடத்து குறிப்பிடத்தக்களவு உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 5.4 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்தி

---

2011 ஆம் ஆண்டு மே 30 அன்று நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான கணக்குக்குழுக் கூட்டத்தினது 16 ஆம் இலக்கக் கட்டளைப் பிரகாரம் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் நிபந்தனைகளை மீறிய 18 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,810,032 தொகையானது 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்பு |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு | குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் காணப்படுகின்றமை |
| (ஆ) கொள்வனவு | (i) கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கமைய நடவடிக்கை எடுக்காமை |
| | (ii) களஞ்சியத்திலிருந்து பொருட்கள் பெறப்பட்டதன் பின்னர் பொருட் பெறுவனவுக் குறிப்பு, வழங்கல் மற்றும் பொருட் பதிவேட்டில் பதியப்படுவதற்கு தாமதம் ஏற்படுதல் |
| (இ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் சுட்டிக்காட்டப்பட்ட நலிவுகள் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை |
| (ஈ) ஆராய்ச்சி மற்றும் நிர்மாணச் செயற்திட்டக் கட்டுப்பாடு | ஆராய்ச்சி செயற்திட்டம் மற்றும் நிர்மாணச் செயற்திட்டம் என்பன குறித்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாமையும் செயற்திட்டங்களது ஆவணங்கள் பாதுகாப்பாகப் பேணப்படாமையும் |
| (உ) மதியுரைச் சேவைப் படிக் கொடுப்பனவுக் கட்டுப்பாடு | மதியுரைச் சேவைகளை வழங்குவதற்கு முன்னர் நிறுவகத்தின் தலைமை நிறைவேற்றுத்தர உத்தியோகத்தரது அங்கீகாரம் பெறப்படாமை |
| (ஊ) சம்பளமும் படியும் | குறித்த சம்பளத் தொகுதிக்கேற்ப சம்பளமும் படிகளும் வழங்கப்படாமை. |